தீர்மான நகல்

2024-ம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் திங்கட்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு வாணாபுரம் ஊராட்சியின் சாதாரண கூட்டம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. A.தீபா அவர்கள் தலைமையில் நடைபெற்றதன் கூட்ட நடவடிக்கைகள் .

வருகை : ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் , வாணாபுரம் ஊராட்சி .

வீட்டு மனைப்பிரிவுகள் அனுமதி அளித்தல் சார்பு.

அ1/001/2024 நாள் : 13.05.2024

பொருள் எண்: 19/2024 நாள் : 13.05.2024

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , கள்ளக்குறிச்சி அவர்களின் ந.க.எண் QPTWRGYM/20301/2023/2024/TCP க.மா:028/2024.

2. மனுதாரர் திரு. அ.பிரகாஷ் த/பெ அப்பாராசு வாணாபுரம் அவர்களின் விண்ணப்பம் நாள் : 02.05.2024

3. ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் கள ஆய்வு அறிக்கை.நாள் : 07.05.2024

4. பார்வை கட்டணம் ரூ.1500 மற்றும் அனுமதி கட்டணம் ரூ. 23000 ஆன்லைன் விண்ணப்ப எண் QPTWRGYM மூலம் செலுத்தப்பட்டது.

5. மொத்த மனைகளின் எண்ணிக்கை 23.

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் வாணாபுரம் ஊராட்சியை சேர்ந்த திரு. அ.பிரகாஷ் த/பெ அப்பாராசு அவர்களுக்கு சொந்தமான வாணாபுரம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள சர்வே எண் 144/1D1B, 1D2A ,3A1,3B1, 145/2B1A1,2B1B, 2B2 மற்றும் 145/2B3 . இதில் 1.32 ஏக்கர் (அ) 5353 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட PRL நகர் மனை எண்கள் 1 முதல் 23 வரை உள்ள மனைகளுக்கு வாணாபுரம் ஊராட்சியால் அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு

மாறாக மனையின் அளவுகள் , சாலைகளின் அமைப்புகளின் அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் மாற்றக்கூடாது என்றும் மாறாமல் உள்ளது என்றும் அங்கிகரிக்கப்பட்ட மனைவரைபடத்தில் உள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகளை தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த தெரிவித்தும் பொது பயன்பாட்டிற்காக உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ள குழுக்கள் மற்றும் பொது இடத்தில் எந்த வித மாற்றமும் செய்யக்கூடாது என்றும் மனுதாரர் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி நுழைவு வாயில் 6X4 அளவிலான தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு தகவல் பலகையில் வைக்கப்பட வேண்டும் என்றும் இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகள் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ளவாறு திருப்தியுடன் அமைக்கப்பட வேண்டும் என்றும் சாலைகளையும் பொது இடங்களையும் மேதகு ஆளுநர் அவர்களின் சார்பான ஊராட்சி மன்ற தலைவர் அவர்களுக்கும் பின்னால் இப்பதவிக்கு வரும் ஊராட்சி மன்ற தலைவர்களும் பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்தும் வகையிலும் மேற்படி நிபந்தனைகள் உள்ளது உள்ளபடியாக உள்ளது. அங்கிகாரம் வழங்கிட மன்ற அனுமதி கோருதல் .

தீர்மான எண் : 19/2024 நாள் : 13.05.2024

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் வாணாபுரம் ஊராட்சியை சேர்ந்த திரு.அ.பிரகாஷ் த/பெ அப்பாராசு அவர்களுக்கு சொந்தமான வாணாபுரம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள சர்வே எண் 144/1D1B, 1D2A ,3A1,3B1, 145/2B1A1,2B1B, 2B2 மற்றும் 145/2B3 . இதில் 1.32 ஏக்கர் (அ) 5353 ச.மீட்டர் பரப்பளவு கொண்ட PRL நகர் மனை எண்கள் 1 முதல் 23 வரை உள்ள மனைகளுக்கு வீட்டு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ளவும் வீட்டு மனையினை அங்கிகரித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது .

/ உண்மை நகல் /

A-1000/18

தலைவர்

வாணாபுரம் ஊராட்சி,

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்று